1968 ஆகஸ்ட் 28]

எல்லாம் நம்மை விட்டுப் போய்விட்டது. வேறு சிலர் வேண்டுமென்றே இருந்த காட்டுப் பகுதிகளை அழித்துவிட்ட காரணத்தால் நம்முடைய மாநிலத்தில் காடுகள் குறைந்துவிட்டன.

பூந்தமல்லி பத்திரப் பதிவாளர் அலுவலகம்

*170 வின :—திரு. கே. சகாதேவ கண்டர் : மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி சப்-ரிஜிஸ்தராராபீசை சென்னை தலைமை மாவட்ட செயலகத்தோடு இணைக்காமல் காஞ்சிபுரம் தலைமைச் செயலகத்தோடு இணைத்தது பொதுஜனங்களுக்குப் பாதகமாய் உள்ளது என்று அந்த வட்ட பொதுஜனங்களிடமிருந்து மகஜர் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம், எனில், அரசு அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பூவிருந்தவல்லியில் உள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்தை காஞ்சீபுரம் பதிவு மாவட்டத்திலிருந்து, சென்னைப் பதிவு மாவட்டத்திற்கு 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் மாற்றுவது குறித்த ஆணைகள், வருவாய்த் துறையின் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் தேதியிட்ட 908-ம் எண் அரசாங்க ஆணையில் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. கே. சகாதேவ கண்டர் : தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியில் உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசை, காஞ்சீபுரத்துடன் இணைக்காமல், சென்னையுடன் சேர்த்தால் அந்த வட்டார பொது மக்களுக்கு நன்மையாக இருக்கும். போக்குவரத்து வசதிக்கும் ஏற்றதாக இருக்கும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கோரிக்கையை அந்தத் தொகுதி எம். எல். ஏ. அவர்கள் தலையிட்டு அரசைக் கேட்டுக்கொண்டதன் மேல், உடனடியாக மாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

Clash between warders and prisoners.

*171 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Law and Co-operation be pleased to state :—

(*a*) whether there was a clash between the warders and prisoners in Tiruchirappalli Central Jail on or about the 26th of February 1968 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழுவதற்கில்லை.

குடும்பக் கட்டுப்பாடு

*172 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மாதம் இரண்டு பேர்களைக் கொண்டு வர வேண்டும் என்று ஆணை ஏதேனும் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.